[19th July 1962

50 per cent of the demand in the country. The Government of India and the Coal Controller, Calcutta, have been addressed for enhancing the State quota of hard coke. The Coal Controller has also been requested to supply additional quota of nut coke under spare capacity to get over the difficult position of hard coke.

திரு. வை. சங்கரன் : இந்தக் கோக் பற்றுக்குறை காரணமாக ஒருசில இரும்புத் தொழிற்சாலைகள் எல்லாம் முற்றிலும் அப்படியே நிறுத்தவேண்டிய நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இதே நிலைமை மற்ற ராஜ்யங்களிலும் ஏற்பட்டிருக்கிறதா? அல்லது நம் நாட்டில் மட்டும்தான் இந்த நெருக்கடி இருக்கிறதா? இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லா ராஜ்யங்களுக்கும் அவரவர்களுக்குத் தேவையான (பி.வி.) கோக்கில் 50 சதமானம் குறைவு செய்துதான் மத்திய சர்க்கார் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

Coal (shortage)

*417 Q.—SRI M. S. SELVARAJAN (on behalf of SRI V. KARISHNAMOORTHY): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any shortage of coal in the State; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) Yes, Sir. The allocation of coal to the States has been fixed with reference to the availability of rail transport capacity and not with reference to the demands of the States. Even the allotted quantity is not often physically received in full or in time due to reduced wagon offerings and transport bottlenecks.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நிலக்கரியை கடல் மார்க்கமாகக் கொண்டுவர நமக்கு வாய்ப்பு இருக்கின்றதல்லவா ? அதை நாம் எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்திற்கு 629 வாகன்கள் கோட்டா கொடுத்திருக்கிறார்கள். இதில் 225 வாகன்கள் கடல் மார்க்கமாக கொண்டு வருகிறோம். கடல் மார்க்கமாகக் கொண்டுவரக்கூடிய நிலக்கரிக்கு சற்று விலை அதிகமாகிறது.

ஸ்தல நிர்வாகம் (ஊழியர்களுக்குப் பென்ஷன்).

*418 கேள்வி.—திரு. சா. கணேசன் (திரு. முனு ஆதி சார்பாக) : கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களில் 1—8—1955-க்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் பென்ஷன்